செ.வெ.எண் :279 நாள் : 30.09.2021

**ஊரக உள்ளாட்சி தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சித் தேர்தலையொட்டி வாக்கு எண்ணும் மையமான குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட மாங்காடு முத்துக்குமரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திற்குட்பட்ட பென்னலூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வாக்கு எண்ணும் மையங்கள், வாக்குப்பெட்டிகள் வைக்கப்படும் பாதுகாப்பு அறை மற்றும் வாக்கு எண்ணும் அறையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்புகள், முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணும் அலுவலர்கள் வரும் வழிகள் மற்றும் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஆய்வு செய்து மேலும் பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து குன்றத்தூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய அலுலவகத்திற்கு சென்று வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுபப்படும் தேர்தலுக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், சிக்கராயபுரம், சிறுகளத்தூர் மற்றும் நந்தம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களை பார்வையிட்டு, வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான மின்சார வசதி, குடிநீர் வசதிகள் போன்றவற்றை ஆய்வு செய்தார். மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக சாய்தளம் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இவ் ஆய்வின்போது, காவல் கண்காணிப்பாளர் மரு.எஸ்.சுதாகர், ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக பொறியாளர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**